செ.வெ.எண்: 248 நாள்: 24.3.2020

**புதுக்கோட்டை மாவட்ட ஆவின் நிறுவனத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---------------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை மாவட்ட ஆவின் நிறுவனத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆவினில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கையாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி ஆவினில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் கைகளை சுத்தம் செய்யும் வகையில் கைகழுவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பண்ணைப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் அணிந்து பணிபுரிந்து வருகின்றனர். பால் விநியோகப்பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் முகக்கவசம் மற்றும் கையுறை அளிந்து பணியாற்றி வருகின்றனர். அலுவலகப்பிரிவில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் முகக்கவசம் அணிந்து 1 மீட்டர் இடைவெளியில் பணிபுரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன்படி பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் கையுறை, முகக்கவசம் அணிந்து பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கையுறை, தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் வழங்கப்பட்டு பால் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களை குறிப்பிட்ட இடைவெளியில் நின்று பாலை கொள்முதல் செய்ய சங்க செயலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வொன்றியத்தின் மூலம் நடத்தப்படும் பாலகங்கள் மற்றும் பால் விநியோகம் செய்யும் முகவர்கள் அவ்வப்போது அரசு ஆணையின் (ஆவின்) அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பால் விற்பனைக்கான தொகையை முகவர்கள் நேரடியாக ஒன்றியத்தில் செலுத்துவதை தவிர்த்து ஆன்லைன் மூலம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் புதுக்கோட்டை ஆவின் நிறுவனத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**